அதிகாரிகளுக்கு

சபாநாயகர் எச்சரிக்கை

சென்னை, ஜூலை. 20-

தமிழக சட்டசபையில் சபாநாயகர் பி.டி.ஆர். பழனி வேல்ராஜன் நேற்று ஒரு அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் கூறியதாவது:-

கவர்னர் உரையின்போது உறுப்பினர்களிடம் இருந்து 969 கேள்விகள் பெறப்பட்டன. அவற்றுக்கு பதில்கள் தயாரிக்க 42 நாட்கள் அவகாசம் தரப் பட்டுள்ளது.

அதன்படி 18-7-96 வரை 632 கேள்விகளுக்கு பதில்கள் வந்திருக்க வேண்டும். ஆனால் 60 கேள்விகளுக்கு மட்டுமே பதில்கள் வந்துள்ளன.

இந்த செயலை அனுமதிக்க முடியாது. ஏற்கனவே 42 நாள் அவகாசம் அதிகம் என்று கூறுகிறார்கள்.

இது முதல் கூட்டம் என்பதால் அரசு அதிகாரிகளுக்கு எச்சரிக் கையாக கூறிக் கொள்கிறேன். உரிய காலத்தில் கேள்விகளுக்கு பதில் வராவிட்டால், அவையை அவமதித்ததற்காக அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும்.

இவ்வாறு சபாநாயகர் கூறினார்.